# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1923/65 - 2015 ජූලි මස 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.07.16

*1923/65 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 59.

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

12 (2) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 12 (2) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, எல்லா பாதுகாப்பு தலைக்கவச தயாரிப்பாளர், இறக்குமதியாளர், விநியோகஸ்தர் அல்லது வியாபாரிகளும் பாதுகாப்பான தலைக்கவசம் தொடர்பான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உரிய எஸ். எல். எஸ். 517 (SLS 517) உற்பத்தி சான்றுப்படுத்தல் குறியீட்டினை கீழே குறிப்பிட்டவாறு குறிக்கப்பட்டிருந்தாலன்றி அவற்றை தயாரிக்கவோ, இறக்குமதி செய்யவோ, விநியோகிக்கவோ, களஞ்சியப்படுத்தவோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ, விற்பனைக்காக வைக்கவோ அல்லது விற்பனைக்கு கோரவோ அல்லது மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட கீழ் குறிக்கப்பட்டுள்ள வகைப்படுத்தலிற்கமைவான பாதுகாப்பு தலைக்கவசங்களை விற்பனை செய்ய முடியாதென பணிப்புரை வழங்குகின்றது.

வகை அ (A) - போட்டிகளுக்கான மற்றும் அதிகூடிய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதனை நோக்காக கொண்ட தலைக்கவசம்.

வகை ஆ (B) - சாதாரண மோட்டார் உந்து வண்டி ஓட்டுநர்கள் தலைக்கவசம் பொது சாலைகளில் பாவனை நோக்கத்திற்கானவை

இப்பணிப்புரை 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பணிப்புரையின்படி,

கலாநிதி ஆர். எம். கே. ரத்நாயக்க,
தவிசாளர்.

கொழும்பு,
2015, யூலை 16.

7- 1499

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.